# தோட்டக்கலை மற்றும் மலைப்பயிர்கள் துறை

## திறன் மேம்பாட்டு பயிற்சி – வழிகாட்டி நெறிமுறைகள்

- திறன் மேம்பாட்டு பயிற்சிக்கு அந்தந்த மைய தோட்டக்கலை இணை/துணை இயக்குநர்கள் உரிய முயற்சி மேற்கொண்டு தங்கள் இலக்கிற்கு ஏற்ப மாணவர்கள் சேர்க்கை மேற்கொண்டு பயிற்சியளிக்க வேண்டும்.
- உள்ளூர் தொலைக்காட்சி, பேனர், சுவரொட்டி, துண்டு பிரசுரங்கள் மற்றும் கிராம பிரச்சாரம் மூலம் அதில் அளவில் விளம்பரம் மேற்கொண்டு தகுதிவாய்ந்த இளைஞர்களை தேர்வு செய்து பயிற்சியளிக்க வேண்டும்.
- பெண்கள், கிராமப்புற இளைஞர்கள், ஆதிதிராவிடர், பழங்குடியினர் மற்றும் மாற்று திறனாளிகளை முன்னுரிமையின் அடிப்படையில் பயிற்சிக்கு சேர்க்க வேண்டும்.
- ஏற்கனவே, தமிழ்நாடு திறன் மேம்பாட்டு கழகம் / தேசிய திறன் மேம்பாட்டு கழகத்தின் ஏதேனும் ஒரு தகுதி தர நிலையில் (Qualification pack ) பயிற்சி பெற்ற மாணவர்களை இப்பயிற்சியில் அனுமதிக்க கூடாது. இதற்கான அறிவிப்பு சான்றிதழ் விண்ணப்பத்துடன் இணைக்கப்பட வேண்டும்.
- சம்பந்தப்பட்ட தோட்டக்கலை இணை / துணை இயக்குநர்கள் தங்கள் நிறுவனத்திற்கு ஒதுக்கிடப்பட்ட உள்நுழைவு முகவரியின் மூலம் தமிழ்நாடு திறன் மேம்பாட்டு கழகத்தின் இணையதளமான https://www.tnskill.tn.gov.in குழு (Batch) உருவாக்கி பதிவு செய்துள்ள பயிற்சியாளர்களை சேர்க்கை செய்ய வேண்டும்.
- திறன் மேம்பாட்டு பயிற்சி தொடங்குவதற்கு 10 நாட்களுக்கு முன்பாகவே குழு (Batch) வாரியாக சேர்க்கை செய்யப்பட்ட பயிற்சியாளர்களின் விபரப் பட்டியலை தமிழ்நாடு திறன் மேம்பாட்டு கழகத்திற்கு முகவரியிட்டு இவ்வலுவலகத்திற்கு நகலிட வேண்டும்.

- பயிற்சியில் சேர்க்கப்பட்ட பயிற்சியாளர்களின் பட்டியலை இத்துறையின் இணையதளம் (www.tnhorticulture.tn.gov.in) மற்றும் தங்களது மையத்தின் அறிவிப்பு பலகையிலும் வெளியிட வேண்டும்.
- நுண்ணீர் பாசன தொழில் நுட்பவியாளர் (Micro Irrigation technician), (Gardener) கார்டனர், (Florist) பயிற்சியாளருக்கான கால அளவு 25 நாட்களாகும். இது தவிர ஆரம்பத்தில், ஒரு வார காலம் அறிமுக பயிற்சியளிக்க வேண்டும். ஆக மொத்தம் இப்பயிற்சியானது 30 நாட்களுக்கு வழங்கப்படும்.
- திங்கள் முதல் வெள்ளி வரை வார வேலை நாட்களில் மட்டுமே தொடர்ச்சியாக பயிற்சியளிக்க வேண்டும்.
- பயிற்சியில் கலந்து கொள்ளும் பயிற்சியாளர்களுக்கு அறிமுகப் பயிற்சிகாலம் நீங்கலாக மீதமுள்ள 25 நாட்களுக்கு மட்டும் போக்குவரத்து செலவுக்காக நாள் ஒன்றுக்கு ரூ. 100 அவர்கள்தம் தேசிய மையமாக்கப்பட்ட வங்கி கணக்கில் நேரடியாக செலுத்தப்படும்.
- பயிற்சியாளர் சேர்க்கை முடிந்தவுடன், தமிழ்நாடு திறன் மேம்பாட்டு கழகத்தினால் வரையறுக்கப்பட்ட சேர்க்கை ஆணையினை பயிற்சிக்கு தேர்வு செய்யப்பட்ட ஒவ்வொரு பயிற்சியாளர்க்கும் வழங்கப்பட வேண்டும். மேலும் அதன் நகலினை தமிழ்நாடு திறன் மேம்பாட்டு கழகத்திற்கு அனுப்பிட வேண்டும்.
- மாணவர்களின் வருகை பதிவேடு பராமரிக்கப்பட வேண்டும்.
- குறைந்தபட்சம் 85 சதவீதம் வருகைப்பதிவு உள்ள பயிற்சியாளர்க்கு மட்டுமே தேர்வு எழுதிட அனுமதிக்க வேண்டும்.
- பயிற்சியின் தன்மையை பொருத்து பயிற்சியாளர்களை செயல்விளக்க திடலுக்கு நேரடியாக அழைத்துச் சென்று பயிற்றுவிக்க வேண்டும்.
- ஒவ்வொரு குழுவிற்கு அளிக்கப்பட்ட பயிற்சிக்கும் முறையான வீடியோ மற்றும் புகைப்படங்கள் (GPS enable) மூலம் ஆவணப்படுத்த வேண்டும்.
- பயிற்சி நடத்தப்படும் ஒவ்வொரு நிலையத்திற்கும் அந்தந்த தோட்டக்கலை இணை/ துணை இயக்குநர்கள் பயிற்சி ஒருங்கிணைப்பாளர் ஆவர். ஓய்வு பெற்ற

அல்லது திறமைமிக்க சிறப்பு நிபுணர்களை வைத்து பயிற்சியாளர்களுக்கு பயிற்சியளிக்கலாம்.

- பயிற்சி காலத்தில் பயிற்சியாளர்கள் தமிழ்நாடு தோட்டக்கலை வளர்ச்சி முகமையினால் அங்கீகரிக்கப்பட்ட தமிழ்நாடு திறன் மேம்பாட்டு கழகத்தின் முத்திரை பதிக்கப்பட்ட டி.சர்ட் களை அணிய வேண்டும்.
- பயிற்சி காலத்தில் பயிற்சியாளர்களுக்கு தமிழ்நாடு தோட்டக்கலை வளர்ச்சி முகமையினால் அளிக்கப்பட்ட பயிற்சி புத்தகம் மற்றும் குறிப்பேடு வழங்கப்படும்.
- திறன் மேம்பாட்டு பயிற்சியானது வேலை இல்லா இளைஞர்களுக்கு மட்டுமே வழங்கப்பட வேண்டும். எந்தவொரு கல்வி நிலையத்திலும் பயின்றுவிடும் மாணவர்களை பயிற்சியில் அமர்த்தக் கூடாது.
- குறைந்தபட்சம் 8ம் வகுப்பு தேர்ச்சி பெற்று, 18 வயதுக்கும் மேற்பட்ட விருப்பமுள்ள இளைஞர்கள் தாங்கள் விரும்பும் நுண்ணீர் பாசன தொழில் நுட்பவியாளர் (Micro Irrigation technician), (Gardener) கார்டனர் மற்றும் (Florist) பயிற்சியில் கலந்து கொள்ள www.tnhorticulture.tn.gov.in என்ற இணையதளத்தில் இருந்து விண்ணப்பத்தினை பதிவிறக்கம் செய்து தாங்கள் விரும்பும் மையத்திற்கு விண்ணப்பிக்கலாம்.